**MCOP. No. 1200/2019** **DATE:19.11.2025**

Deposition of Witness : P.W.1

Name : Mr.Raja segar

Father/Husband Name : Mr.

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 19th day of September 2025.

---

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த விபத்து எப்படி நடைபெற்றது என்றால் நான் அதிகாலை 3.30 மணியளவில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்த கார் என் மீது மோதி விபத்தை ஏற்ப்படுத்தியது. மசாஆ 2 ல் நீங்கள் முறையாக வாகனத்தை ஒட்டிவந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. மசாஆ 8 ல் நீங்கள் முறையாக வாகனத்தை ஒட்டிவந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் விபத்து நடைபெற்ற உடன் நீங்கள் மயக்க நிலையில் இருந்தீர்களா என்றால் நான் லேசாக பேசக்கூடிய நிலையில் இருந்தீர்கள் என்றும் உங்கள் நண்பர் தீலிப்குமார் என்பவருக்கு நீங்கள் பேச சொன்னீர்கள் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் உங்கள் நண்பர் தீலிப்குமார் உங்களுக்கு தலையிலும் வலதுகையிலும், வலது கால் தொடையில் பலத்த உட்காயம், இடுப்பு மற்றும் வலது உ்ள்கையில் உட்காயம் ஏற்ப்பட்டதாக நீங்கள் உங்கள் நண்பர் திலீப் குமாரிடம் கூறியதாக கூறிஉள்ளார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள காயங்களுக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். இந்த மனுவில் காலம் 11 ல் Comminuted Fracture of Right Hand என்ற ஒரு காயமே இல்லை என்றால் சரியல்ல. நீங்கள் உங்கள் மனுவில் காலம் 11 ல் சொல்லப்பட்டுள்ள 10 காயங்களி்ல் 5 காயங்கள் மட்டுமே ஏற்ப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த விபத்தினால் உங்களுக்கு அறுவை செய்தார்களா என்றால் காலிலும் கையிலும்

அறுவை சிகிச்சை செய்து ஸ்டீல் பிளேட் பொறுத்தப்பட்டுள்ளது. நீங்கள் ராஜீவ் காந்தி மருத்துவமனையில் உங்களு்க்கு 30.11.2018 ல் தான் அறுவை சிகிச்சை செய்து ஸ்டீல் பிளேட் பொறுத்தப்பட்டுள்ளது என்றும் 08.12.2018 ல் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கபட்டீர்கள்என்றும் அறுவை சிகிச்சைக்கு பிறகு நீங்கள் 8 நாட்கள் தான் மருத்துவமணியல் உள்நோயாளியாக இருந்தீர்கள் என்றும் நீங்கள் 50 நாட்கள் மருத்துவமணியல் உள்நோயாளியாக இருந்தீர்கள் என கூறுவது தவறு என்றால் சரியல்ல. மசாஆ 9 ல் முதுகில் வலி இல்லை என்றும், முதுகில்தண்டில் எலும்பு முறிவு இல்லை என்றும், தலை மற்றும் முகத்தில் எலும்பு முறிவு இல்லை என்று்ம் இரத்தநாளங்களில் பாதிப்பு இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொதுஅறுவை சிகிச்சை நிபுணர் உங்களுக்கு எந்த காயமும் இல்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. மசாஆ 9 ல் வலது கையில் அல்னா பகுதியில் 3 ல் 1 பகுதியல் அறுவைசிகிச்சை செய்து பிளேட் மற்றும் ஸ்குரு பொறுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். 26.12.2018 எலும்புகள் நன்றாக கூடிஉள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உங்களுக்கு வலது கையில் சின்ன அறுவை சிகிச்சை செய்து பிளேட் ம்றறும் ஸ்குரு பொறுத்தப்பட்டுள்ளது என்றும் உங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றால் சரியல்ல. மசாஆ 10 28.03.2019 வேலையில் சேரலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ESi மருத்துவமணையி–ல் 27.03.2019 வரை விடுப்பு எடுத்ததற்கான ஊதியம் வாங்கி உள்ளீர்கள் என்றால் சரிதான். உங்களுக்கு நிரந்தர ஊணம் ஏதும் இல்லை என்றால்ி சரியல்ல. நீங்கள் மருத்துவ செலவிற்காக ரூ 1 லட்சத்து 20 ஆயிரம் செலவு செய்துள்ளீர்கள் என குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. உங்களுக்கு ரூ 1 லட்சத்து 20 ஆயிரம் வருமான இழப்பு ஏற்ப்பட்டது என்றும் போக்குவரத்து செலவு 60 ஆயிரம் ஏற்ப்பட்டது என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. நீங்கள் வலி மற்றும் வேதனைக்காக 3 லட்சம் இழப்பீடு கோரிஉள்ளதும், நிரந்தர ஊணத்திற்காக 4 லட்சத்து 50 ஆயிரம் கோரிஉள்ளதும், வருமான இழப்பிற்காக 3 லட்சம் கூறிஉள்ளதும் தவறு என்றால் சரியல்ல. நீங்கள் ெவளியில் செலவுசெய்து இருந்தால் 50 ஆயிரத்திற்கு மேல் செலவு ஆகி இருக்காது என்றால் சரியல்ல.

பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றும் அது கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை–</u>** இல்லை.

X

என்னால் தட்டச்சருக்கு திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவர் சரி என ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

தேதி: 19.11.2025.

**Sd/– R.Jagadeesan**
3 ஆம் நீதிபதி
சிறுவழக்குகள் நீதிமன்றம்.